# சிருஷ்டிப்பில் படிப்படியாக பார்க்கலாம்- நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில், அறிவியலின் காரணமாக தங்களுடைய கிறிஸ்தவ விசுவாசத்தை கைவிட்டவர்களின் கேள்விகளுக்கு இன்று பதிலளிக்க இருக்கிறோம். ஏதோவொரு கட்டத்தில் நீங்கள் இன்றைய நவீன அறிவியலாவது சிருஷ்டிப்பை பற்றிய வேத பதிவிகளுடன் ஒப்பிட இயலாதென்று நினைக்கிறீர்கள். ஆனால் இந்த தொடரில் சமீபத்திய அறிவியல் ஆய்வுகள் உங்களை விசுவாசத்திற்கு நேராக நடத்துவதற்கான ஆதாரங்களை பார்க்க இருக்கிறோம். அதோடு, மற்ற கேள்விகளுக்கும் பதிலளிக்க இருக்கிறோம், இயற்கையின் சாதனைகள் வேதத்தின் பதிப்பில் இருக்கிறது என்ற எதிர்பார்ப்புடன் இருக்க வேண்டியது அவசியமா?

டாக்டர். வால்டர் கெய்சர்: எதிர்பார்ப்பு அவசியம் தான், ஏனென்றால் காரணகர்த்தா ஒருவர்தானே. அதாவது, ஒரு குறிப்பிட்ட கட்டிட கலைஞரால் கட்டப்பட்ட ஒரு கட்டிடத்தையும் அவர் கட்டிய வேறொரு கட்டிடத்தையும் பார்க்கும்போது, நீங்கள், இது பிரான்க் லாயிட் ரைட் கட்டிடம் என்பீர்கள்.” இந்த பிரபஞ்சத்தை பார்க்கும் போது, அது தேவனால் உண்டாக்கப்பட்டது. அது எல்லாவற்றிலும்

இருப்பது, “மேட் இன் USA அல்ல ஆனால், “ஜீவனுள்ள தேவனால் உண்டானது என்றிருக்கிறது.” நீங்க வசனத்தை பார்த்தாலும், அதுவும் தேவனிடத்தில் இருந்து வந்ததுதான். இதன், காரணகர்த்தா ஒருவரே. இரண்டையும் உண்டாக்கியது ஒருவரே. இதன் வியாக்கியானங்கள் மாறுபடலாம், ஆனால் ஆதாரங்கள் மாறாது, மூல குறிப்புகள் மாறாதவைகள். அதே தேவனிடத்திலிருந்து தான் ஆதி தகவல்கள் வருகிறது. இல்லாவிட்டால் சிருஷ்டிப்பின் உபதேசத்தை நாம் தூர எரிந்திருப்போம். அப்படியில்லாவிட்டால் நாம் தேவ ஆவியினால் அருளப்பட்ட, தேவ வார்த்தையை புறக்கநித்திருப்போம். எதையும் நம்மால் புறக்கணித்திட முடியாது. அவை இரண்டும் ஜீவனுள்ள தேவனிடமிருந்து வருகிறது.

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு எனது விருந்தினர் வானியலாளரான டாக்டர். ஹக் ராஸ் டொரான்டோ பல்கலைகழகத்தில் வானியலில் பிஹெச்டி பெற்றவர், கேல் டேக்கில் விண்மீன் திரள் ஆராய்ச்சியில் டாக்டர் பட்டம் பெற்றவர். அவர் பல புத்தகங்களையும் எழுதியிருக்கிறார், அவருடைய சமீபத்திய புத்தகம், நேவிகேடிங் ஜெனிசிஸ். அதோடு நாம் எபிரேய பண்டிதரான டாக்டர். வால்டர் கேயசருடைய வார்த்தைகளையும் கேட்க இருக்கிறோம், இவர் உலகிலேயே பழைய ஏற்பாடு மற்றும் எபிரேய மொழியில் அதிக அறிவாற்றல் உடைய நபராக பலரால் கருதப்படுபவர். எங்களோடு இணைந்து இந்த நிகழ்ச்சியில் எப்படி சிருஷ்டிப்பின் பதிவை

கொண்டுள்ள  ஆதியாகமம் 1 மற்றும் 2 நவீன அறிவியல் கண்டுபிடுப்புகளுடன் ஒத்துப்போகிறது என்பதை கேட்டு அறிந்துகொள்ளுங்கள் இது ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சி

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு அற்ப்புதமான ஒன்றை பார்க்கயிருக்கிறோம். எனது விருந்தினரான வானியலாளரும் வானியர்பியலாளருமான, Dr. ஹக் ராஸ். கடந்த சில வாரங்களாக அவருடைய ஆவணப்படத்திலிருந்து சில காட்சிகளை உங்களுக்கு காண்பித்து வருகிறோம் “ஜர்னி டுவார்ட் கிரியேஷன்”, நாம் வாழ்கிற இந்த பிரபஞ்சத்தை தேவன் எவ்வளவு நேர்த்தியாக துல்லியமாக வடிவமைத்திருக்கிறார் என்பதை பார்த்துவருகிறோம். இன்றைக்கும் தேவன் நமக்கு வேதாகமத்தில் கொடுத்திருக்கும் பதிவுகளை பார்க்க இருக்கிறோம், ஆதியாகமம் 1, ஆதியாகமம் 2. இப்போதும் வேதாகமத்தில் தேவன் நமக்கு உரைத்த முதல் வார்த்தையில் இருந்து நான் துவங்கிட விரும்புகிறேன். அவர் சொல்கிறார், “ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.” இந்த எளிமையான பத்து வார்த்தைகள் விஞ்ஞானத்தின் அனைத்து தகவல்களையும் கொண்டிருக்கிறது. நம்முடைய நண்பர்களில் ஒருவருடைய சில தொகுப்புகளையும் உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறேன், எபிரேய பண்டிதர் Dr. வால்டர் கெய்சர். அவர் மிகவும் பிரசித்திபெற்றவர். அவரிடம் நாம் ஒன்றை கேட்டுக்கொண்டோம், இந்த வார்த்தைகளை

எபிரேயத்திளிருந்து அப்படியே மொழிபெயர்க்கும் போது அதன் அர்த்தம் என்னவாக இருக்கிறது? அவர் அளித்த பதில் இதுதான். கேளுங்கள்:

## "அறிவியல் மற்றும் பைபிளின் பெரும் விவாதம்"

**கெய்சர்:** தேங்க்ஸ், ஜான். இது உண்மையில் சரியான துவக்கத்தை பற்றி சொல்கிறது, அந்த பகுதி சொல்கிறது, " ஆதியிலே". உண்மையில், வேத வசனங்கள் எல்லாம் மெய்யானது என்று நம்புகிறவர்கள் அனைவரும் இதுதான் துவக்கம் என்பதை புரிந்துகொள்வார்கள். அந்த வரியின் அடுத்த பகுதி, வானங்களையும் பூமியையும்," பிரபஞ்சம் என்பதன் சரியான வேதாகம வார்த்தை. அதைதான் நாம் ஹேண்டியாடிஸ் என்கிறோம்: ஹின்- ஒன்று, டியா - மூலம், டிஸ் - இரண்டு. எனவே இரண்டு வார்த்தைகளில் இருந்து ஒரு கருத்து உண்டாகிறது. பிரபஞ்சம் என்பது வானம் பூமியென்ற வார்த்தையில் இருக்கிறது. இப்ப முழுமையான ஒரு கூரை ஆதியிலேயே போடப்பட்டிருக்கிறது. இதை செய்தது யார்? தேவன். தேவன் உண்டாக்கினார். பாரா என்ற வார்த்தை தேவனை குறிக்கும் விதமாக 45 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. வேறுயாருமில்லை. உருவாக்க வடிவமைக்க போன்றவைகளுக்கு வேறு சில வார்த்தைகள் இருக்கிறது. ஒருபோதும் மனிதர்கள் பாரா என்ற வார்த்தையை பயன்படுத்துவதில்லை, மேலும் இதனோடு பயன்படுத்தப்பட்டவை

என்று எந்த பொருளையும் சொல்ல முடியாது. எனவே ஒரு உறுதியான துவக்கம் இருந்ததை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என நினைக்கிறேன், அது முற்றிலும் தேவனால் உண்டானது, அதில் இந்த முழு பிரபஞ்சமும் அடங்கும். இதற்க்கு பிறகுதான் இரண்டாம் வசனத்தில் பூமியை குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. ஆதியாகமத்தை போல, முதல் காரியத்தை முதலில் வைக்க வேண்டும் - பிரபஞ்சம், சரி, இதற்கிடையில், கீழிருக்கும் பூமியை பார்க்கலாம். இப்போதும் பூமி என்னும் தலைப்பை கவனிக்க  போகிறோம்.  நீங்க, எவ்வளவு காலம் பின்னுக்கு சென்றாலும் சரி, அது ஆதியிலிருந்திருக்கிறது, இந்த நிலையில் தான் கிருஸ்தவர்கள் ஒவ்வொருவரும் நிலையாக இருக்கவேண்டும், "ஆமா! ஆதியிலே இருந்தது. அதுதான் வேதாகமத்தின் நாட்கள்.

**ஆன்கர்பெர்க்:** சரி, ஹக், Dr. வால்டர் கெய்சர் ஆதியாகமம் 1:1 ட்ரை பற்றி சொன்னதை கேட்டதற்கு பிறகு, ஏன் வானியலாளர்கள் இதை ஆதரிக்கிறார்கள் என்று சொல்லுங்க இதை பற்றி வேறு சில கருத்துகள் கூட இருக்கலாமே.

டாக்டர். ஹக் ராஸ்:.வால்ட் கெய்சர் சொன்ன காரியம் என்னவென்றால் அதைதான் நாங்கள் சிருஷ்டிப்பின் உபதேசமான எக்ஸ் நிஹிலோ என்கிறோம், ஒன்றுமில்லாததிலிருந்து தேவன் பிரபஞ்சத்தை எப்படி உண்டாக்கினார், ஒரே நொடியில் அனைத்தும்

வந்தது, விண்வெளி நேரம் எல்லாம் உண்டானது. வானியலாளர்கள் ஒன்றை கண்டுபிடித்துள்ளனர் அதாவது இந்த பிரபஞ்சத்தை குறித்தத்தான சரியான புரிந்துகொள்ளுதல், பொது சார்பியல் கோட்பாடுகள், விண்வெளி நேர தோற்றங்கள், கண்காணிப்புகள், இவையனைத்தும் ஒரு சரியான துவக்கம் இருப்பதை வலியுறுத்துகிறது, ஆதியிலுண்டான துவக்கம் என்பது  பருப்பொருள் மற்றும் ஆற்றலுக்கு மட்டும் உண்டானதல்ல,  அதில் விண்வெளியும் நேரமும் அடங்கும். ஏனென்றால் விண்வெளி நேர தோற்றங்களினால் நாத்திக வானியர்பியலாளர்களும் இயற்கையை பற்றின மத விளக்கத்தை எப்போதும் புறக்கணிக்க முடியாது என்கின்றனர்.

**ஆன்கர்பெர்க்:** யா, தேவன் இருக்கிறார் அவர் எல்லாவற்றையும் உருவாக்கியிருக்கிறார். சரி, சொல்லுங்க. நீங்க இந்த காரியங்களை முதலில் அறிந்த போது உங்களுக்கு ஆண்டவரை பற்றி தெரியாது. அந்த மாதிரியான ஒரு சூழல்லதான் நீங்க, இந்த பிரபஞ்சத்தின் துவக்கும் அறிவியலை சார்ந்து இல்லை என்பதை தெரிந்துகொண்டீங்க. இந்த கண்ணோட்டத்தினால் பெரிய வாக்குவாதமே உருவானது. அவர்கள் இந்த வரியை உச்சரிக்க முடியாமல் கூச்சலிட தொடங்கினர். அதற்கான சில ஆதாரங்களை கொடுத்திருக்கிறீர்கள், அந்த உணர்வை பற்றி சொல்லுங்க. இந்த காரியத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் அவர்கள் கத்தி கூச்சலிட காரணம் என்ன?

**ராஸ்:** வெல், 2 விச்சயங்கள். அவங்களுக்கு ஒரு விஷயம் புரிந்தது இந்த பிரபஞ்சத்திற்கு விண்வெளி கால நேர துவக்கம் இருந்தால், அதற்க்கு அர்த்தம் இந்த கால நேர தோற்றத்தை உண்டாக்கிய அதற்கும் அப்பாற்பட்ட ஒருவர் இருக்க வேண்டும். அது உண்மையில் வேதாகமத்தின் தேவனை குறிக்கிறது, அதை பலரும் விரும்புவதில்லை. அவர்களை கலக்கமடைய செய்த அடுத்த விஷயம் கால அளவுகோல் மிகவும் சிறியதாக இருப்பது. அது பிரபஞ்சத்தை சில பில்லியன்கள் ஆண்டு கால பழமையானதாக காட்டுகிறது. மேலும் உயிரியலாளர்களின் கருத்து என்னவாக இருந்தாலும், இது ஒருவேளை பில்லியன்கள் ஆண்டு பழமையானதாக இருந்தால் துவக்கம் மற்றும் ஜீவன்களின் வரலாற்றை இயற்கையோடு ஒப்பிட்டு சொல்ல முடியாது என்று வானியலாளர்களுக்கு தெரியும்.

**ஆன்கர்பெர்க்:** யா, ஒரு நட்சத்திரத்திற்கு 80 பில்லியன் ஆண்டுகள் எரிந்துகொண்டிருக்கும் ஆற்றல் இருப்பதாக சொன்னது எனக்கு பிடித்திருக்கிறது, ஆனால் விஞ்ஞானிகளின் கருத்து படி பிரபஞ்சம் 13.8 பில்லியன் ஆண்டுகள் பழமையானது என்கின்றனர், இதை வைத்து தான் அவர்கள் வாதாடுகிறார்கள், அப்படிதானே.

**ராஸ்:** இதுவரை முழுமையாக எறிந்த நட்சத்திரத்தை நாங்கள் காணவில்லை. தன்னிடத்தில் எரிபொருள் தீர்ந்து போன நட்சத்திரங்களை கண்டிருக்கிறோம், அவை இப்போதும் குளிர்ந்தது

கொண்டுதான் இருக்கிறது. அவை குளிர்ந்துகொண்டிருக்கும் செயலை பார்க்கும்போது இந்த பிரபஞ்சம் இன்னமும் இளமையோடு இருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

**ஆன்கர்பெர்க்:** சரி, ஆதியாகமம் 1 ரை பார்க்கும்போது, வேதத்தில் ஆதியாகமம் 1ல் நாள் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்ட விதத்தை பார்த்தபோது, உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தை சொல்லுங்கள்.

**ராஸ்:** வெல், நான் முதல்முறையாக வேதத்தை எடுத்தபோது இந்த நாள் என்ற வார்த்தை எதை குறிக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்பினேன், அதில் பயன்படுத்தியிருந்த வார்த்தைகள், சாயங்காலமும், விடியர்காலமும், 3ம் நாள், 4ம் நாள். இது, எல்லாமே, அதாவது இலக்கணத்தின் திருவிளையாடல். எதற்க்காக இந்த வார்த்தைகள் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது? ஏழாம் நாளை பார்க்கும்போதுதான் சாயங்காலமும் விடியர்காலமும் இல்லை என்பதை நான் கவனித்தேன். அதாவது, ஏழாம் நாளை பற்றி 2ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது, இந்த எல்லா காரியங்களும் 2ம் அதிகாரத்தின் 4ம் வசனத்தில் முடிவடைவதை புரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம். ஏழாம் நாளுக்கு சாயங்காலமும் விடியர்காலமும் இல்லை என்பதை நான் பார்த்தபோது, அதில்தான் தேவன் ஓய்ந்திருக்கிறார், மனிதர்களுடைய வரலாற்றில் வித்தியாசமான ஜந்துக்களை நாம் பார்க்க முடியாமல்

இருப்பதற்கு காரணத்தை இது விளக்குகிறது. ஆதாம் ஏவாளை உருவாக்கிய பிறகு சிருஷ்டிப்பின் செயலை தேவன் நிறுத்திவிட்டார், அதனால் தேவன் இன்றைக்கும் ஓய்ந்திருக்கிறார். இயற்கையான செயல்பாடுகளை பார்க்கிறோம், ஆனால் கடந்தகாலத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட இடிபாடுகள் உண்டாகியிருந்ததர்க்கு ஆதாரங்கள் இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** உங்களுடனும் Dr. வால்டர் கேயசருடனும் அந்த விவாதத்தின் நிகழ்ச்சி மற்றும் பல நிகழ்ச்சிகளை நடத்திடும் பொழுது, இதை பார்த்த சில போதகர்கள் அவருக்கு கடிதம் அனுப்பினர். அதை நீங்கள் கேட்க விரும்புகிறேன்.

## "அறிவியல் மற்றும் பைபிளின் பெரும் விவாதம்"

**ஆன்கர்பெர்க்:** ஒரு போதகருடைய கேள்வியிலிருந்து துவங்கிட விரும்புகிறேன், ஏனென்றால் நாம் ஆதியாகமம் 1 மற்றும் 2 ன் சரியான வியாக்கியானத்தை குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம், நாள் என்ற வார்த்தையின் சரியான அர்த்தம் என்ன. உங்களுடைய சில புத்தகங்களை வாசித்ததிலிருந்து, Dr. கெய்சரிடம், சொல்லுகிறார், “Dr. கெய்சர் இந்த காரணம் கண்டுபிடிக்கும் வேலையில் இறங்கி வசனத்தின் மீதிருக்கும் விசுவாசத்தை தளர செய்வது வருத்தமளிக்கிறது. இந்த மறு பரிசீலனையும் விளக்கமும் வசனத்தை

தளரசெய்வதர்க்கு, என்ன காரணம்? வேதாகமம் மற்றும் பரிமாண அறிவியலுக்கு அடித்தளம் போடா நினைக்கிறார்களா. இது அவமானத்திற்குரியது." சரி, நீங்க சரியான விளக்கத்தை எடுத்துரைக்க விரும்புகிறீர்கள் அறிவியலை உட்புகுத்தவில்லை என்பதை பலமுறை எடுத்துக்கூறியும் இப்படி சொல்லுகிறவர்களுக்கு உங்களுடைய பதில் என்ன? அதை சொல்லுங்க, இந்த போதகருக்காக அதை சொல்லுங்கள்.

**கெய்சர்:** வெல், தேங்க்யு, ஜான், அண்ட் தேங்க்யு, பாஸ்டர்,

என்மேலுள்ள கரிசனைக்காக உங்களுக்கு நன்றி. ஆனால் வேதமே என்னை இப்படி செய்ய வைத்ததென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த பகுதியில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பது புரிந்துகொள்ள முயலுகிறேன். வேறு எந்த நோக்கமும் இல்லை. என் தேவனை நான் பிரியப்படுத்த விரும்புகிறேன், ஒவ்வொருவருக்கும் தேவன் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை அறிந்துகொள்ள முயற்சிக்கிறேன். ஆக்கியோனின் முழுமையான திட்டத்தை அறிந்துகொள்ள நான் எவ்வளவு சக்தியை செலவழித்திருக்கிறேன் என்று உங்களுக்கு தெரியாது, அதுதான் மையப்பகுதியாக இருக்கிறது. எனவே, நாள் என்ற வார்த்தையை அவர் சொல்லும்போது, இதை நான் மிக கவனமாக கையாளவேண்டும், "ஆல்ரைட், ஆக்கியோன் எனக்கு சில உள்ளான புதிர்களை வைத்திருக்கிறாரா? அவர் முதல் வித்தியாசத்தை இதில் வைத்திருக்கிறார். சரி, இப்ப, 1:5ல் அதற்கு அர்த்தம் பகலுக்கு எதிரானது இரவு என்கிறார். ஒகே, இதை

வைத்துக்கொள்வோம். 1:14ல் தேவன் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குரிக்கிரதர்க்காக சிறிய பெரிய சுடர்களை உண்டாக்கினார். ஓ, இது இப்போது நக்கு இருக்கும், 24மணிநேரமாக இருக்கிறது. பிறகு இவையனைத்தையும் ஒன்றிணைத்து சொல்லும்போது அவர், இவையனைத்தையும் செய்தபிறகு, அல்லது அவர் இவையனைத்தையும் உண்டாக்கி முடித்த நாளில், இதில் 6 நாளின் காரியங்களும் அடங்கும், இறுதியாக அனைத்தையும் முடித்து தேவன் ஓய்ந்திருந்தார். இதில், மறு விளக்கங்கள் கிடையாது. இது கவலையற்ற நிலையென நினைக்கிறேன். இது பரிதாபமான நிலை. நான் இதற்க்கு மறுவிளக்கம் அளிக்க விரும்பவில்லை அல்லது என்னுடைய விருப்பப்படி சொல்ல விரும்பி, " வெல், நாள் என்பது நாள்தான், நாள் என்றால் என்னவென்று தெரியும்,"என்று சொல்லி, நாளை குறித்த என்னுடைய கருத்து இதுதான்." இல்லை. கிடையாது. நாள் என்பதை எழுதிய ஆக்கியோனின் கருத்துதான் பிரதிபலிக்கப்பட வேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** இன்னொரு இடத்தில் சொல்லும்போது மோசே இந்த வார்த்தையை சொன்னதாக சொன்னீர்கள், கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வாருடத்தை போல இருக்கிறது."

ஒகே, சிலர் இப்படியும் சொல்வார்கள், "ஒரு நாள் ஆயிரம் வருடங்கள் என்று அவர்  சொல்ல வில்லையே."

**கெய்சர்:** ஆமா அது சரிதான். அதற்கு ஈடாக இருக்கும் என்று சொல்லப்படவில்லை. நான் என்ன சொல்ல வர்றேன்னா அதாவது சால்டரில், சங்கீத புத்தகங்களில், 150 சங்கீதங்களின் பெரும்பாலான தலைப்புகள் ஆதியிலிருந்த மொழியில் தான் இருந்தது . அது கிரேக்க மொழிப்பெயர்ப்புகளில், பி சி மூன்றாவது நூற்றாண்டில் வெளியானது. அவர்களால் சில வார்த்தைகளை மொழிபெயர்க்க முடியவில்லை. இன்றைக்கும் சில வார்த்தைகளை மொழிபெயர்க்க முடிவதில்லை ஏனென்றால் அவை ஆதி காலத்து வார்த்தைகள். சங்கீதம் 90ல் மோசே பாடின சங்கீதமாக இருக்கிறது, அதில்தான், நாள் என்றா வார்த்தையை அவர் பயன்படுத்துகிறார், இங்கு அவர், எதனால், அது ஆயிரம் வருஷத்தை போலிருக்கிறது என்று சொல்லுகிறார். சரியாக ஆயிரம் வருடம் எந்ட்ருஅ அவர் சொல்லவில்லை. உண்மையில், அதற்கும் அதிகமாகவே இருக்கலாம். என்னுடைய கருத்து என்னவென்றால், வெல், இத கேளுங்க, தேவனுடைய சமுகத்தில் நின்ற ஒருவர் தான் இதன் ஆக்கியோன். அவருக்கு நல்ல அனுபவம் இருக்கிறது. எனவே, இதற்க்கு மறுவிளக்கம் தேவையில்லை, அன்பு போதகரே. இந்த பகுதில் சொல்லப்படுவதை நான் அப்படியே எடுத்துக்கொள்ள விரும்புகிரே, தேவன் சொல்லியிருப்பவைகளை விளங்கிக்கொள்ள அதுதான் என்னுடைய ஒரே வழி.

**ஆன்கர்பெர்க்:** சரி, ஹக், Dr. கெய்சர் சொன்னதிலிருந்து எடுத்துக்கூற விரும்புகிறேன். பிரியமானவர்களே நீங்கள் இதை கவனமாக கேட்கும்படியாகவும் நான் விரும்புகிறேன். போன வார நிகழ்ச்சியில் நாம் இங்கிலிஷ்மேன் எபிரேய ஒத்தவாக்கியத்தை பற்றி பார்த்தோம், அதை பார்க்கும் போதுவேதாகமத்தில் நாள் என்ற வார்த்தை "யோம்" என 58 வெவ்வேறு வார்த்தைகளாக பயன்படுத்தப்பட்டிருப்பதை பார்த்தோம். இந்த ஒரு வார்த்தைக்கு எதற்க்காக இத்தனை அர்த்தங்கள்? எபிரேய மொழியில் இருக்கும் வார்த்தைகளின் எண்ணிக்கையை பொறுத்துதான் பயன்பாடு இருக்கிறது. உதாரணமாக, எபிரேய மொழியில் மொத்தம் சுமார் 8, 700 வார்த்தைகள் தான் இருக்கிறது, நம்முடைய ஆங்கில சொற்களால், நம்முடைய கருத்தை தெரிவிக்கும் 500,000 மேலான வார்த்தைகள் இருக்கிறது. அதனால், சில எபிரேய வார்த்தைகள் 2அல்லது 3 விதங்களிலி பயன்படுத்தப்படுகிறது, அந்தந்த பகுதிகள் தான் அதன் அர்த்தத்தை விளக்கத்தை  நிர்ணயிக்கிறது. நான் சொன்னது போல, ஒத்தவாக்கியங்கள் யோம் என்ற வார்த்தையின் 58 வெவ்வேறான பயன்பாட்டை நமக்கு அளிக்கிறது.

எனவே நான் உங்களுக்கு துரிதமாக நான்கு உதாரணங்களை அளிக்கிறேன். எட்டு முறை பழைய ஏற்ப்பாட்டில் யோம் என்ற வார்த்தை வயதை குறிக்க பயன்படுத்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக, ஆதியாகமம் 18:11, கூறுகிறது, ஆபிரகாமும் சாராளும் யோம்

வயதுசென்று முதிர்ந்தவர்களாயிருந்தார்கள், அதற்கு அர்த்தம் வயதானவர்கள். ஆதியாகமம் 47:28ல் சொல்லும்போது யாக்கோபுடைய ஆயுசு நாட்களை குறிக்கிறது, இங்கு யோம் யாக்கோபின் வாழ்நாளை குறிக்கிறது.

நான்கு முறை வேதத்தில் யோம் என்ற வார்த்தை எந்நாளும் என்ற வார்த்தையாக மொழிபெயர்க்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, உபாகமம் 5:29ல் தேவன் கூறுகிறார், “அவர்கள் எந்நாளும் எனக்கு பயந்து என் கற்பனைகளை எல்லாம் கைக்கொள்வதற்கு ஏற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும்.” இந்த எந்நாளும் என்றா வார்த்தை யோம். உபாகமம் 5:29 இதிலும் நாள் என்பது அவர்களின் வாழ்நாள் முழுவதையும் குறிக்கிறது.

மூன்றாவது உதாரணம்: யோம் என்பது காலத்தையும் குறிப்பதாக இருக்கிறது. யோசுவா 24:7 கூறுகிறது, “வனாந்தரத்திலே யோம் சஞ்சரித்தீர்கள், அநேக நாள்,” இந்த பல மாத காலத்தை குறிக்கிறது.

மேலும் 19 முறை யோம் “என்றென்றைக்கும்” என்று பயன்படுத்தப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு, சங்கீதம் 23:6 இது சிறந்த உதாரணம். அதில், “என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையையும் கிருபையும் என்னை தொடரும். நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் (யோம்) நிலைத்திருப்பேன்.” இது நித்தியத்தை குறிக்கிறது.

ஹக் இப்ப, யோம் என்ற வார்த்தாயின் நான்கு உதாரணங்களை பார்த்தால் இது நம்முடைய ஆங்கில மொழியில் நமக்கு வித்தியாசமான அர்த்தத்தை கொடுக்கிறது. இப்ப ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் மோசே முன்னும் பின்னுமாக சொல்லுவதில் மூன்று நான்கு அர்த்தங்களை நமக்கு அளிக்கிறது. அது என்னவென்று விளக்கமாக சொல்லுங்க.

**ராஸ்:** வெல், பூமியானது ஆதியிலே, ஜலத்தின் மேல் ஒரு இருளான படிவமாக இருந்தது. நாள் 1, தேவன் ஒளி ஊடுருவ முடியாமல் இருந்த சுற்றுச்சூழலில் ஒரு மாற்றத்தை ஏற்ப்படுத்தி ஒளியை ஊடுருவ செய்தார். இப்ப வசனம் 5ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? “தேவன் வெளிச்சத்துக்கு பகல் என்று பேரிட்டார்.” இது சூரிய உதயமுதல் சூரிய அஸ்தமனம் வரை இருக்கும் வெளிச்சத்தை குறிக்கிறது. அதன் பிறகு சிருஷ்டிப்பின் நான்காவது நாள் தேவன் ஒலிகசியும் தன்மையிலிருந்து முழுமையான மாற்றத்தை உண்டாக்கி, நிரந்தரமாக இப்போது இருப்பது, போல அவற்றை ஒளி ஊடுருவகூடியதாக இருக்கும் படி செய்தார்.

இப்போது முதல்முறையாக பூமியில் இருக்கும் அனைத்தும் சூரிய ஒளியையும் சந்திரன் நட்சத்திரங்கள் அனைத்தையும் பார்க்க முடிந்தது. அதற்க்கு பிறகு தேவன் இந்த சூரியன் சந்திரன் நட்சத்திரங்களை காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிப்பதற்காக

தேவன் எர்ப்படுத்தியத்தை பார்க்கிறோம். நாள், இது 24 மணிநேரத்தை கொண்ட தினத்தை குறிக்கிறது. அதற்க்கு பிறகு ஆதியாகமம் 2:4 ல் யோம் என்ற வார்த்தை நாள் என பயன்படுத்தப்பட்டுள்ளது, இது முழுமையாக சிருஷ்டிப்பின் வாரத்தை குறிக்கிறது. இது நீண்ட காலத்தையும் குறிக்கும் சொல் என்பதற்கு இந்த பகுதி சிறந்த உதாரணமாக இருக்கிறது. மேலும் வால்ட் கெய்சர் என்ன சொல்கிறார் என்றால் வேதத்தை அப்படியே எடுத்திகொல்வது மட்டும் போதாது, அதன் அர்த்தத்தை புரிந்து கொள்ளும் படி யதார்த்தத்தையும் காண வேண்டும் என்கிறார். எந்த மாதிரியான யதார்த்தமான விளக்கங்கள் வேதத்தை எந்தவித முரண்பாடும் இல்லாமல் வாசிக்க நமக்கு உதவிடும்? அதனால் தான் அவரும் நானும் ஆதியாகமத்தின் நாள் என்பது நீண்ட காலத்தை குறிக்கிறது என்ற கருத்தை ஏற்றுக்கொள்கிறோம். இது வேதாகமம் தன்னிலே தானே முரண்படுவதை தடுக்கும் ஒன்றாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** நீங்க குறிப்பிட்ட காரியத்தில் இப்ப நினைவிற்கு வரும் அடுத்த கேள்வி. சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதல் நாள் ஆயிற்று என்ற வார்த்தைகள். இதை எப்படி எபிரேயத்திளிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்று நான் டாக்டர் கேயசரிடம் கேட்டேன், அவர் சொல்வதை கேளுங்கள்.

"அறிவியல் மற்றும் பைபிளின் பெரும் விவாதம்"

**ஆன்கர்பெர்க்:** ஜனங்களுடைய கருத்து என்னவென்றால் “யோம்” என்ற வார்த்தை சாயங்காலமும் விடியர்காலமும் என்று சொல்லுவது சாதாரன தினத்தை குறிக்கிறது, அது நீண்ட காலமல்ல என்கின்றனர். சரி, உங்களுடைய கருத்து என்ன?

**கெய்சர்:** வெல், சாயங்காலமும் விடியர்காலமும், முதலில் சாயங்காலத்திலிருந்து பார்க்கலாம் அது சுவாரஸ்யமாக இருக்கும். முதலாவது சாயங்காலம் எங்கிருந்து வந்தது? அது ஏற்கனவே இல்லாத ஒரு பகலில் இருந்து தோன்றியிருக்கும். எனவே, நீங்க இதை துவங்கும் காரியமே தவறாக இருக்கிறது என நினைக்கிறேன். சாயங்காலமும் விடியர்காலமும் சேர்ந்து 24மணிநேரத்தை கொடுப்பதில்லை. சரி போகட்டும், மூன்று சாயங்காலமும் விடியர்காலமும் இங்கு இருக்கிறது, நாள் 1, நாள் 2, நாள் 3, இதற்கு பிறகு தேவன் நான்காம் நாளை உண்டாக்கினார்.இப்ப ஒரு பிரச்சனயில் இருக்கிறோம். இதற்கு பிறகு ஏழாம் நாள் இன்றைக்கு வரைக்கும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது. எபிரேயர் 4ல் சொல்லப்படுகிறது தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் கிரியைகளை முடித்து ஓய்ந்திருந்தார் சேப்பாடிஸ்மோஸ் - ஓய்வு - அது கிரேக்க வார்த்தை. சாபத் என்ற வார்த்தை - தேவன் முடித்தபோது அதற்க்கு

ஒரு முடிவை வைத்தார், இதற்க்கான வேறொரு கிரேக்க வார்த்தை, கடாபாசிஸ்” நின்றிடு என்றார்.

வேதாகம பதிப்பில் மூன்று முறை தேவன் சிருஷ்டிப்பின் கிரியைகளை நிறுத்தியிருக்கிறார், தேவனுக்கும் சிருஷ்டிப்பிருக்கும் இடையில் ஒரு பிளவு. தேவன் சிலுவையில் தொங்கியபோது எல்லாம் முடிந்தது என்றார். முடிந்தது. அதற்க்கு பிறகு வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் ஒருமுறை தேவன் கூறார், “முடிந்தது! இது அவருடைய தேவத்துவத்தின் கிரியைகளுக்கும் சரித்திரத்தில் அவருடைய செயல்களுக்கும் நித்தியநித்தியமான ஒரு முடிவை பதிக்கிறது. 3 பயங்கரமான நிறுத்தத்தின் நாட்கள். அது இன்னமும் தொடர்ந்த்துகொண்டேதான் இருக்கிறது. “நாமும் அதில் பிரவேசிப்போம்” எபிரேயர் நான்கில் சொல்லப்படுகிறது, “இளைப்பருதலில் பிரவேசிப்போம்.” சுவாரஸ்யமான விஷயம் என்னன்னா ஏழாம் நாளுக்கு சாயங்காலமும் விடியர்காலமும் இருப்பதற்கு எந்த சான்றும், இல்லை. எனவே நான்கு அல்லது ஐந்து காரணங்களால் இது 24 மணிநேரம் என்பது வாராமாக இருக்கிறது என்ற வாதத்தை உண்டாக்க கூடியதாக இருப்பதாக காண்கிறேன்.

**ஆன்கர்பெர்க்:** அநேகருக்கு தெரியாத ஒரு விஷயம் நான் கல்லூரி மாணவனாக டாக்டர் கேயசருடைய வகுப்பில் உட்கார்ந்து அவருடைய பாடத்தை கேட்டிருக்கிறேன் என்பது. அவர் எப்படி இந்த வீடியோவில்

பேசுகிறாரோ அப்படியேதான் வகுப்பிலும் போத்தித்திடுவார். அதில் பாதி விளையாட்டுத்தனமாக இருந்தாலும் மீதி பாதி அறிவாற்றளுடையவருடைய வார்த்தைகளாக இருக்கும். அது மிகவும் அருமையானது. அவர் வேதத்தை கையாளும் முறை சுவாரஸ்யமாக இருக்கும். இந்த சாயங்காலமும் விடியர்காலமும் என்ற கருத்தில் அவர் பேசும்படியாக நான் விரும்பினேன். நீங்களும் கூட, கிறிஸ்தவரல்லாத நிலையில், இந்த வேதாகமத்தை வாசிக்க துவங்கியபோது இதுதான் உண்மையென்பதை நம்பிடும்படியான வழிவாசல் இருந்தது, இது தவறான ஒன்றாக நிச்சயம் தோன்றியிருக்காது. அதை நீங்கள் எப்படி எடுத்துக்கொண்டீர்கள்?

**ராஸ்:** வெல், நான் புரிந்துகொண்டேன் அதாவது பூமி வானம் நாள் என்ற வார்த்தைகளுக்கு நிச்சயம் பலதரப்பட்ட விளக்கங்கள் இருக்கும் ஏனென்றால் ஆதியாகமம் 1ல் பல விதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே. அது சாயங்காலமும் விடியர்காலத்திர்க்கும் பொருந்தும் என்று நினைத்திருந்ததால் எனக்கு அதிர்ச்சியாக இல்லை. எனஅக்கு புதிராக இருந்தது, இது உண்மையில் என்னவாக இருக்கும்? ஆனா இதில் நாட்கள் நிர்ணயிக்கப்பட்டதாக காணப்படுகிறது, சாயங்காலம், விடியற்கால, நாள் 2, 3, 4, இதை பார்ஹ்த்தால் நிச்சயம் இது ஒரு நாளின் துவக்கத்தையும் ஒரு நாளின் முடிவையும் குறித்து சொல்லுவதாகவே தோன்றிடும்.

அப்போதுதான் கவனித்தேன் ஏழாம் நாளுக்கு அந்த வார்த்தைகள் சொல்லப்படவில்லை. இந்த வார்த்தைகளை பார்க்கும் பொது என்னுடைய ஆர்வத்தை தூண்டுவதாக இருந்தது, சாயங்காலமும், விடியர்காலமும், 2 வினை சொற்கள் எதற்கு? இரண்டையும் என் முழுமையடைவதாக இருக்கிறது? இந்த காரியங்கள் இங்கு சொல்லப்பட்டிருக்கும் நாள் என்ற வார்த்தைக்கு தனித்துவமான விசேஷித்த விளக்கம் இருக்கிறது என்பதை நமக்கு நினைவுபடுத்துகிறதா? அதன் காரணமாக, புரிந்துகொள்ளவேண்டும், ஆல்ரைட், ஏழாம் நாளில் சாயங்காலமும் விடியற்காலம் இல்லை என்பதன் அர்த்தம் ஏழாம் நாள் இன்னமும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது. கெய்சர் சொன்னதை நீங்கள் கேட்டதுபோல, நாம் இன்னமும் அந்த ஏழாம் நாளில்தான் இருக்கிறோம் என்பதற்கு பல வசன ஆதாரங்கள் இருக்கிறது. தேவன் எதிர்காலத்தில் புதிய சிருஷ்டிப்பை உருவாக்கும் போது மறுபடியும் சிருஷ்டிப்பார். ஆனால் இப்போதைக்கு அவர் தமது சிருஷ்டிப்பின் கிரியைகளிளிருந்து ஓய்ந்திருக்கிறார்.

ஒரு விஞானியாக என்னை வியக்க வைத்தாது, ஏனென்றால் தேவனை சோதிக்க ஒரு வழி நமக்கு இருக்கிறது, ஏனென்றால் தேவனே இப்போது அவர் சிருஷ்டிப்பின் கிரியைகளிளிருந்து ஓய்ந்திருப்பதாக கூறுகிறார். அறிவியலில் மனிதர்களுடைய வாழ்வில் நடந்த இயற்கையான காரியங்களை பார்க்க இருக்கிறோம். ஆனால்

மனிதர்களுடைய காலத்திற்கு முன்பு இயற்கைக்கு அப்பாற்பட்ட இடைபடுதல் உண்டானதற்கான உதாரணங்களை பார்க்க வேண்டும். ஒரு இயற்பியலாளராக வானியலாளராக மனிதர்கள் உருவாகும் முன்பு மனிதர்கள் உருவான பிரக இவை இரண்டிற்கும் இடையில் பெருத்த மாட்ட்ரத்தை நாங்கள் காண்கிறோம். இதுவே வேதாகமத்தின் தேவன் தான் அனைத்தையும் உண்டாக்கினவர் என்பதை என்னை நம்பச்செய்வதாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** பிரியமானவர்களே, இந்த காரியங்களை கேட்பதில் ஆர்வமுடநிருக்கிரீர்கள் என நினைக்கிறேன். இதை அடுத்த வாரம் தொடர்ந்து பார்க்க இருக்கிறோம். நீங்கள் பார்க்க தரவிடாதீர்கள். ஏன்? ஏனென்றால் தேவன் ஆறாம் நாளில் ஆதாமையும் ஏவாளையும் உருவாக்கியபோது என்ன நடந்தென்று பார்க்க இருக்கிறோம். அந்த ஆறாம் நாளில் எட்டிலிருந்து பத்து காரியங்கள் நடந்திருப்பதை நாம் ஒவ்வொன்றாக பார்க்க இருக்கிறோம், அதன்பிறகு உங்களுக்கான கேள்வியும் இருக்கும்: இந்த எல்லா காரியங்களும் இருபத்தினான்கு மணிநேரத்தில் நடந்திடுமா, அல்லது இது நீண்ட கால நேரத்தை குறித்து சொல்லுகிறதா? மேலும் நாம் நான்காம் நாளைக்குரித்தும் பார்க்க இருக்கிறோம். அந்த நாளில் தான் தேவன் சூரியனையும் சந்திரனையும் நட்சத்திரங்களையும் படைத்தாரா? அல்லது வேதாகமம் வேறுவிதமாக சொல்கிறதா, அது முதல் வசனத்தை மறுபடியும் சுட்டிகாட்டுகிறதா, “ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும்

சிருஷ்டித்தார்? இவை அனைத்தையும் நாம் பார்க்க இருக்கிறோம் இந்த மொழி என்ன சொல்கிறது, இந்த தகவல்கள் உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும் என நம்புகிறேன், அடுத்த வாரம் உங்களை சந்திக்க விரும்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.